[1970 ஆகஸ்ட் 31

உறுப்பினர் அப்படிப்பட்டவர்களைப் பார்க்கும் நேரத்தில் இரகசியமாகப் போலீசுக்குப் போன் செய்து பிடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரிலுள்ள அன்னியர் சிலைகள்

* 138 வினா—என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள அன்னியர் சிலைகளை அகற்றிவிட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்நியர் சிலைகள் உள்ள இடங்களில் வேறு சிலைகளை வைப்பதற்காக ஏற்பாடுகள் செய்யும் வரையில், அவை இருந்த இடத்திலேயே இருக்கலாம் என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள அந்நியர் சிலைகளை அகற்றிட வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்நியர் சிலைகளை அகற்ற வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து குறிப்பாக எந்தக் கோரிக்கைகளும் வராவிட்டாலும் அப்படிப்பட்ட ஒரு கருத்து நீண்ட நாட்களாக நிலவி வருகிறது. ஆனால், 1957-ம் ஆண்டு மே திங்களில் நாடாளுமன்றத்தில், அந்நியர் சிலைகள், சின்னங்கள், ஓவியங்கள் இவைகளை அகற்ற வேண்டும் என்ற ஒத்திவைப்புப் பிரேரணை வந்தபோது, பொதுவாக படிப்படியாக இச் சிலைகள் அகற்றப்பட வேண்டுமென்றும், தேசீய உணர்ச்சியைப் புண்படுத்தக்கூடிய சிலைகள், சின்னங்கள் இருந்தால் அவை உடனே அகற்றப்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அப்போதைய பிரதம அமைச்சர் தனது கருத்தைத் தெரிவித்தார். அதற்குப்பிறகு நமது மாநிலத்திலே நேப்பியர் பார்க் அருகே இருந்த "காரன்வாலிஸ்" சிலையும், மௌண்ட்சாலை வெல்லிங்டன் பாலத்தின் அருகே இருந்த "வெல்லிங்டன்" சிலையும் அகற்றப்பட்டன.

திரு. கே. விநயகம் : அந்நியர்கள் நம் நாட்டை ஆண்டார்கள் என்கிற ஞாபகம் எப்பொழுதுமே நமக்கு உறுத்த வேண்டுமென்று சொல்லித்தான், இப்படிப்பட்டவர்களிடமிருந்தெல்லாம் விடுதலை பெற்ற நாடு என்று தெரிய வேண்டுமென்ற அந்தக் காரணத்திற்காகத்தான், மீண்டும் நாம் அடிமை ஆகக்கூடாது என்று ஞாபகமூட்டத்தான் இந்தச் சிலைகள் இருக்க வேண்டுமென்று, முன்னே ஒரு அமைச்சர் பதில் சொன்னார்கள். அந்தக் கருத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ? அல்லது இவைகளை நடைமுறையிலே நாளுக்குநாள் எடுத்துவிடலாம் என்ற அந்தக் கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு முன்பு அந்நியர்கள் நம்மை ஆண்டார்கள் என்பதற்கு அடையாளமாக அவைகள் இருக்க வேண்டுமென்று யார் கூறியிருந்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்

வதாக இல்லை. நாடாளுமன்றத்திலே நம்முடைய முன்னாள் பிரதம அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், படிப்படியாக இச் சிலைகள் அகற்றப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்தச் சிலைகள் இருக்குமிடங்களில் வேறு சிலைகளை வைக்கும்பொழுது அவைகளை அகற்றிவிடலாம் என்று நம் மாநில அரசு தீர்மானித்து அந்த வழியைக் கையாளுகிறது. எங்களுக்கிருக்கும் அச்சமெல்லாம், அந்தச் சிலைகளை அகற்றிவிட்டு இன்னொரு சிலையை வைக்கும்பொழுது, இந்தச் சிலை வைப்பதைத் தவிர இவர்களுக்கு வேறு வேலையில்லை என்ற அந்தப் பழிச்சொல் வந்துகொண்டிருக்குமே என்று அதற்காகத்தான் சற்றுத் தயங்குகிறோம்.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவரவர்களே, இராஜாஜி மண்டபத்திலுள்ள அன்னிய கவர்னர்களின் சிலைகளை அகற்றும் உத்தேசம் உண்டா? குறிப்பாக, வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட எட்வர்ட் கிளாவின் படம் இருக்கிறது. மத்திய சர்க்கார் உத்தரவுப்படி அந்தப் படத்தை அகற்றலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அங்கே இருக்கின்ற அந்தப் படங்கள் ஓவியம் அழகுக்காக இருப்பதாகத்தான் இன்று யாரும் பார்த்து ரசித்துக்கொண்டு இருக்கிறார்களேயல்லாமல், அவர்கள் இன்னின்னாரைச் சிறையிலிட்டார்கள் என்று பெருமையோடு பார்த்துக்கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, ஓவிய அழகுடைய, வண்ணம் பொருந்திய சரித்திர நாயகர்களுடைய படங்களை அமைக்க வேண்டுமென்ற எண்ணமிருக்கிறது. ஆனால், அதற்காகும் செலவு பெருந்தொகையாக இருக்கும் என்று கருதப்படுகிறது. அப்படிப்பட்ட உருவங்கள், ஓவியங்கள் எழுதப்பட்டு, பிறகு அந்தப் படங்கள் அகற்றப்பட வேண்டுமென்ற கருத்திலே நான் நம்பிக்கையுடையவனாகயிருக்கிறேன்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த அந்நியர் சிலைகளை அலங்கோலப்படுத்துதல், உருச் சிதைத்தல், தார் கொட்டுதல் போன்ற இவைகளில் ஈடுபட்டார்கள் என்று பத்திரிகையிலே செய்தி வந்ததே அது உண்மையா? அதன்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது நடைபெற்ற ஒரு விவசாயிகளினுடைய ஆர்ப்பாட்டத்தின்பொழுது ஜார்ஜ் மன்னருடைய சிலையின்மீது தார் ஊற்றப்பட்டது என்றும், அதிலே கம்யூனிஸ்ட் கட்சியின் கொடி ஒன்று அதன் கையிலே கொடுக்கப்பட்டதாகவும் செய்தி வந்தது. ஆனால், உடனடியாக அந்தச் சிலை சுத்தப்படுத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].